<u>**சுருக்கம்**</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலம் – 2012–13 ஆம் ஆண்டு முதல் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 1000 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை**</u>

அரசு ஆணை (நிலை) எண்.126 நாள்.29.10.2012

படிக்க:

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநரின் கடித எண்.டி2/1741/2012, நாள்.14.5.2012.

------

<u>**ஆணை:-**</u>

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இத்துறையில் 2012–13 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது புதிய அறிவிப்புகளில் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

**மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் 1000 மாணவ, மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்குதல்:**

“12–ஆம் வகுப்பில் மாநில அளவில் முதல் 1000 இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த 1000 மாணவ / மாணவியருக்கு அவர்கள் பட்டப்படிப்பு முடிக்கும் காலம் வரை வருடத்திற்கு ரூ.3000/– வீதம் வழங்கிடவும், இதற்கென ரூ.30.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்”

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மாநில அளவில் மேனிலைத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் மாணவ / மாணவியர் தொடர்ந்து உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் திட்டம் ஏதும் இத்துறையில் இல்லையாதலால், பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவியரை ஊக்குவித்து அவர்கள் உயர் கல்வியினை தொடர ஏதுவாகவும் இத்துறை மூலம் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ / மாணவியருக்கு முதலமைச்சரின் தகுதி பரிசுத்தொகை வழங்கும் திட்டத்தினை 2012–13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தலாம் என பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலும், இத்திட்டத்தின் கீழ் மாணவ / மாணவியரை தேர்வு செய்யும் போது பின்வரும் நடைமுறைகளை பின்பற்றலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்:

(1) 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் தமிழ் மொழியை முதன்மை பாடமாக (ஒரு பாடமாக) பயின்று மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் பிற்படுத்தப்பட்டோர் /

மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த முதல் 500 மாணவர்களுக்கும், 500 மாணவியருக்கும் ஆண்டொன்றிற்கு ரூ.3000/– வீதம் அவர்கள் பட்டய / பட்ட படிப்பை முடிக்கும் வரை அல்லது உயர்ந்தபட்சமாக 5 ஆண்டுகள் வரை பரிசுத்தொகை வழங்கலாம்.

(2) இத்திட்டத்தினை பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த அனைத்து மாணவ/ மாணவியருக்குமாக ஒருங்கிணைத்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் செயல்படுத்தலாம்.

(3) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் முதல் 500 இடங்களைப் பெற்ற மாணவர் மற்றும் 500 இடங்களைப் பெற்ற மாணவியரின் பட்டியல் அரசுத் தேர்வுத் துறையிலிருந்து பெற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(4) அரசுத் தேர்வுத் துறையிலிருந்து பெறப்படும் பட்டியலில் இடம் பெற்றுள்ள மாணவ / மாணவியரின் மதிப்பெண், சாதி, பாடப்பிரிவு குறித்த விவரங்களுக்கான சான்றுகளை சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் பெற்று உறுதி செய்து ஒருங்கிணைந்த அறிக்கையினை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(5) மாவட்டங்களிலிருந்து பெறப்படும் அறிக்கைகள் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தில் பரிசீலிக்கப்பட்டு பரிசுத்தொகை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநரால் ஒப்பளிப்பு செய்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு அளிக்கப்படும்.

(6) சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பரிசுத்தொகையை மாணவ / மாணவியருக்கு அவர்களின் கல்வி நிறுவனங்கள் மூலம் பட்டுவாடா செய்து விவரத்தினை தெரிவிக்க வேண்டும்.

(7) புதுப்பித்தல் இனங்களைப் பொறுத்தவரை அடுத்து வரும் ஆண்டுகளில் அவர்கள் தொடர்ந்து கல்வி பயில்கின்றனரா என்ற சான்றினை சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனங்களிடமிருந்து பெற்று (Bonafide Certificate) புதுப்பித்தல் தொகைகளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களே ஒப்பளிப்பு செய்யலாம்.

(8) இத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் பட்டய / பட்ட படிப்பை முடிக்கும் வரை உயர்ந்தபட்சமாக 5 ஆண்டுகள் வரை பரிசுத்தொகை வழங்கலாம்.

(9) இத்திட்டத்தின் கீழ் 500 மாணவர் மற்றும் 500 மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கப்படவுள்ள நிலையில் பயனாளிகளை தேர்வு செய்யும்போது பட்டியலில் வரையறுக்கப்படும் 500–வது நபர் பெறும் மதிப்பெண்ணை ஒன்றுக்கு மேற்பட்ட மாணவ / மாணவியர் பெற்றால் அவ்வனைத்து மாணவர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்கலாம். அவ்வாறு வழங்கும்பட்சத்தில் மாணவ / மாணவியரின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

(10) இப்பரிசுத் திட்டத்தில் வருமான வரம்பின்றி மாணவ / மாணவியரை தேர்வு செய்யலாம்.

(11) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் வழங்கப்படும் பேரறிஞர் அண்ணா விருது பெறும் மாணவ/மாணவியரை தவிர்த்து இத்திட்டத்தில் மாணவ / மாணவியர் தேர்வு செய்யப்பட வேண்டும்.

4. இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் அரசிற்கு ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூ.30,00,000/– (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) பின்வருமாறு செலவினம் ஏற்படும் என பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்:

| | |
|---|---|
| மாணவர் ஒருவருக்கு ரூ.3000/– வீதம் 500 பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் மாணவர்களுக்கு ஏற்படும் செலவினம் | ரூ. 3000X 500 ரூ.15,00,000/– |
| மாணவி ஒருவருக்கு ரூ.3000/– வீதம் 500 பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் மாணவியருக்கு ஏற்படும் செலவினம் | ரூ. 3000X 500 ரூ.15,00,000/– |
| மொத்தம் 1000 மாணவ / மாணவியருக்கான செலவினம் | ரூ.30,00,000 ரூ.30.00 இலட்சம் |

5. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலினை செய்து, அதனை ஏற்று, தமிழை முதன்மை பாடமாகக் கொண்டு அரசு பள்ளிகளில் பயின்று 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் செயற்படுத்துவதுபோல் மாணவர்களில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 500 மாணவர்களுக்கும், மாணவியரில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 500 மாணவியர்களுக்கும் மேலே பத்தி 3–ல் காணும் நடைமுறைகளுக்கு உட்பட்டு முதலமைச்சரின் தகுதி பரிசுத் தொகை வழங்கும் திட்டத்திற்கு ரூ.30.00 இலட்சம் (ரூபாய் முப்பத்து இலட்சம் மட்டும்) வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட புதிய கோரிக்கை எண்.09–02ன் கீழ் துவக்கப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

<u>பிற்படுத்தப்பட்டோர் நலம்:</u>

2225–ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–277–கல்வி – I திட்டத்தில் சேராதது – BX – மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் பிவ/மிபிவ/சீம/சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த மாணாக்கருக்கு பரிசுத்தொகை வழங்குதல் – 59 பரிசுகளும் வெகுமதிகளும். (த.தொ.கு: 2225 03 277 BX - 5907)

7. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாடு அதிகாரி ஆவார்.

8. சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் / கருவூல கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ஒரு "புது பணி" குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்ட பேரவையின் ஒப்புதல் கிடைக்கும் வரையில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வ.செ.பொது–I)த் துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை முன்பணமாக

வாங்குவதற்கு விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் நிதி(வ.செ.பொது-I)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை துணை மான்ய கோரிக்கையில் சேர்ந்திட உரிய விளக்க குறிப்பினை உரிய தருணத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் 2012-13 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்திற்கான முன்மொழிவுகள் நிதித்துறைக்கு அனுப்புமாறும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அதன் அ.சா.எண்.58508/நிதி(பி,மிபி(ம)சிந)/2012, நாள்.28.10.2012 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 1430 (ஆயிரத்து நானூற்று முப்பது)-ன்படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தங்க கலியபெருமாள்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை-5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை – 5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை-2.
மாநில கணக்காயர், சென்னை-18/35.
மாநில கணக்காயர் (துணிக்கை I), சென்னை -6.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை -5.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சரின் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்)
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
நிதித்(பிமிபி/வ.செ.பொது-I /வ.செ.பொது-II)துறை, சென்னை -9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.